பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 27 புதன்கிழமை (09-06-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 193

## ★ மக்களே தீர்வை உருவாக்க வேண்டும்

# சமாதானத் திட்டம் தயாரிக்க

# உதவுவதே எம் பிரதான பணி

## யாழ்.வந்த தூதுக் குழு தகவல்

—உதயன் அலுவலகச் செய்தியாளர்—

யாழ்ப்பாணம், ஜூன் 9

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவும், அதன் மூலம் சமாதானத்தை உருவாக்கவும் வகை செய்யும் சமாதானத் திட்டம் ஒன்றை வகுப்பதற்கு நாங்கள் உதவுவோம். அதுவே எங்கள் பிரதான பணியாக இருக்கும்.

தீர்வுத் திட்டம் எதையும் நாம் முன்வைக்கமாட்டோம். குறிப்பிட்ட வடிவத்தில்தான் தீர்வு அமைய வேண்டும் என்று வற்புறுத்தவும் மாட்டோம். மக்களே பிரச்சினைக்குரிய தீர்வை உருவாக்க வேண்டும்.

*இவ்வாறு தெரிவித்தார் நேற்று யாழ். வந்து சேர்ந்த வெளிநாட்டு சமாதானத் தூதுக் குழுவைச் சேர்ந்த பிலிப்பீன்ஸ் ஆயர் மேதகு குவாண்டி பியுபினோஸ்.*

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினருடன் நடத்திய கலந்துரையாடலின் போதே மேதகு பியுபினோஸ் தமது விஜயத்தின் நோக்கத்தை முன் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் கொழும்பில் வந்து இறங்கியது முதல் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது வரை சகலரும் சமாதானம் வேண்டுமென்றே கேட்டார்கள். இராணுவத் தளபதிகள் முதல் தென் இலங்கையின் அரசியல் தலைவர்கள் வரை, விரைவில் சமாதானம் உருவாக உழைக்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## பிரேமா கொலை விசாரணை: எந்த முன்னேற்றமும் இல்லை

கொழும்பு, ஜூன் 9

ஜனாதிபதி பிரேமதாஸா கொலை விசாரணையில் முன்னேற்றம் எதுவும் இல்லை என்று பாதுகாப்புத்துறை சம்பந்தப்பட்ட நிபுணர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

பிரேமா படுகொலை தொடர்பாக இதுவரை 24 பேர் கைதுசெய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

அந்த அறிவிப்போடு பிரேமா கொலை தொடர்பான தகவல்களைத் தருவோருக்கு ஐம்பது லட்சம் ரூபா சன்மானமாக வழங்கப்படும் எனவும் இரகசிய பொலீஸ் தலைமையகம் அறிவித்திருக்கிறது.

இந்தத் திடீர் சன்மான அறிவிப்பானது ஜனாதிபதி கொலை விசாரணையில் முன்னேற்றம் எதுவும் இல்லை என்பதையும்—

உண்மையான குற்றவாளிகள் சிக்கவில்லை என்பதையுமே காட்டுகின்றது என பாதுகாப்புத்துறை சம்பந்தப்பட்ட நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

அமைச்சரவைக் கூட்டத்தின் பின் நடைபெற்ற செய்தியாளர்கள் மாநாட்டின்

(7 ஆம் பக்கம் பார்க்க)

### பகவான் சத்ய சாயி பாபாவின்

## புட்டபர்த்தி ஆச்சிரமத்தில் நிலக்கண்ணி வெடி மீட்பு!

பெங்களூர், ஜூன் 9

புட்டபர்த்தியில் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் ஆச்சிரமத்தில் வைக்கப்பட்டிருந்த நிலக்கண்ணி வெடி ஒன்றை பொலீஸார் நேற்றுக் காலை செயலிழக்கச் செய்தார்கள்.

கடந்த ஞாயிறு இரவு ஸ்ரீ சத்திய சாயிபாபாவைக் கொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி, கட்டமைப்புமிக்க ஒரு குழுவின் வேலையாக இருக்கும் என்பதற்கான சந்தேகத்தை நிலக்கண்ணி வெடி மீட்கப்பட்ட சம்பவம் எழுப்பியுள்ளது.

இத்தாக்குதலின் நோக்கம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை தெரிவுக்குழு கூட்டம் தமிழ் கட்சிகள் பகிஷ்கரிக்கும்

நாளை நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் கூட்டத்தில் தொடர்ந்து பங்கு பற்றுவதில்லை என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உட்பட கொழும்பில் உள்ள பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் மற்றும் குழுக்கள் முடிவு செய்திருக்கின்றன.

கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று இத்தகவலை வெளியிட்டது. (உ-3)

## அம்பனையில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 9

நேற்று முன்தினம் காலை 6 மணியளவில் தெல்லிப்பளை அம்பனைப் பகுதியில் வாகனத்தில் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தினர்.

தாக்குதலின் போது இராணுவத் தரப்பில் ஏற்பட்ட சேத விவரங்கள் பற்றித் தெரியவரவில்லை. புலிகள் தரப்பில் சேதம் ஏதும் ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டது. (உ-த)

## வடபகுதி பயணிகள் மீது வவுனியாவில் கடும் சோதனை

கொழும்பு, ஜூன் 9

வடபகுதியில் இருந்து வவுனியா வரும் பயணிகள் நொச்சிமோட்டையில் பலத்த சோதனைக்குள்ளாக்கப்படுவதாகவும், பின்னர் வவுனியா பிறவுண் அன்ட் கொம்பனி முகாமில் வைத்து பலத்த விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நொச்சிமோட்டையில் பயணிகள் வரிசையாக நிற்க வைத்து ஐந்து ஐந்து பேராக மட்டும் அனுமதிக்கப்பட்டு, நொச்சிமோட்டை முகாமில் அவர்களின் பொதிகள் பலத்த சோதனைக்குள்ளாக்கப்படுகின்றன.

பின்னர் வவுனியா பிறவுண் அன்ட் கொம்பனி முகாமில் வைத்து பயணிகள் நீண்ட நேரம் படையினரின்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## தூதுக்குழு இன்று புலிகளுடன் பேச்சு

யாழ்ப்பாணம், ஜூன் 9

நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த வெளிநாட்டு சமாதானக் தூதுக்குழுவினர் கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்த பகுதிகளை நேற்றுப் பார்வையிட்டனர்.

காங்கேசன் துறையில் இருந்து 'குமாரி' கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு நேற்று நண்பகல் வந்து சேர்ந்த குழுவினர் வடமராட்சி, அச்சுவேலிப் பகுதிகளுக்குச் சென்று பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்த்தனர்.

பின்னர் யாழ். ஆயர் அதி. மேதகு. தோமஸ் சௌந்தர நாயகத்தைச் சந்தித்துப் பேசினர்.

அதன் பின்னர் யாழ். பல்கலைக் கழகத்தில் ஆசிரியர் சங்கத்தினருடன் கலந்துரையாடினர்.

பி. ப. 4 மணியளவில் அரச

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## ஜனாதிபதியின் ஆசியுடன் வந்துள்ள தூதுக்குழு

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ்ப்பாணம் வந்துள்ள வெளிநாட்டு சமாதான தூதுக்குழு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் ''ஆசி''யுடனேயே இங்கு வந்துள்ளது.

அவர்கள் இங்கு வருவதற்கு எவ்வித கேள்வியுமின்றிப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியது.

இவ்வாறு தூதுக்குழுவுடன் சேர்ந்து வந்துள்ள, அதன் செயலாளராக பணிபுரியும் திரு ஜோ. வில்லியம்ஸ் தெரிவித்தார்.

''சிடெக்'' நிறுவனத்தின் பொறுப்பாளர் அதி. வண ஒஸ்கா பேர்த்தின் வேண்டுதலின் பேரிலேயே இந்தச் சமாதான முயற்சிமேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறினார்.

கடந்த வாரம் கொழும்பு வந்த சமாதான தூதுக்குழுவினர் அங்கு பௌத்த குருமாருடன் சமாதானத்துக்கான வழிமுறைகள் பற்றிக் கலந்துரையாடி உள்ளனர்.

தூதுக்குழு முதலில் புனர்வாழ்வு, புனரமைப்பு சமூக நலத்துறை அமைச்சர் திரு. தயாரத்தினாவை சந்தித்துப் பேசியது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.தூதரகப் பிரதிநிதி நேற்று புலிகளுடன் பேச்சு

யாழ்ப்பாணம், ஜூன் 9

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதி கலாநிதி பீட்டர் நிக்கலஸ் பூநகரிப் பாதை விவகாரம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளை நேற்று மாலை 5 மணியளவில் சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பின்போது விடுதலைப்புலிகள் சார்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. த. தமிழ்ச்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர். கலாநிதி நிக்கலஸுடன் ஐ. நா. தூதரகத்தின் யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. அசோக்குமாரும் இப்பேச்சுக்களில் கலந்து கொண்டார்.

நேற்றைய பேச்சுகள் சுமார் 2 மணிநேரம் நீடித்தது.

பேச்சுக்களின் போது பூநகரிப் பாதையை திறப்பது தொடர்பான நடைமுறைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டதாகவும்—

இப்பேச்சுக்கள் நாளை காலை மீண்டும் தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கலாநிதி பீற்றர் நிக்கலஸ் பலாலியில் இருந்து கப்பல் மூலம் நேற்று நண்பகல் 1 மணியளவில் யாழ்ப்பாணம் வந்தடைந்தார். அவர் யாழ்ப்பாணத்தில் சில தினங்கள் தங்கியிருப்பார் என்றும் தெரியவந்தது. (உ-த)

## ஹேமா புதிய கட்சி ஆரம்பிக்கமாட்டாராம்

புதிய அரசியல்கட்சி எதனையும் தாம் ஆரம்பிக்கப் போவது இல்லை என்று திருமதி ஹேமா பிரேமதாஸா தெரிவித்தார்.

ஆகஸ்ட் முதலாம் திகதி ''சுசரித்த புரவெசி பெரமுன'' என்ற பெயரில் புதிய அரசியல் கட்சி ஒன்றை ஹேமா ஆரம்பிப்பார் என்று சிங்கள வாரப் பத்திரிகை ஒன்று வெளியிட்ட செய்தியை மறுத்த திருமதி ஹேமா பிரேமதாஸா—

''வாழ்நாள் முழுவதும் நான் ஐக்கிய தேசியக் கட்சியையே ஆதரிப்பேன். இன்னொரு கட்சியையும் நான் ஆதரிக்க மாட்டேன்''— என்று கூறினார்.

புதிய ஜனாதிபதி விஜேதுங்கவுக்கும், புதிய பிரதமர் ரணிலுக்கும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(உ-ஏ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/மல்லாகம் ம. வி.

முறைசாராக் கல்வி

## தொழிலகத் தையலும் உடையமைத்தலும் - 1993

மேற்படி பயிற்சி நெறி எமது பாடசாலையில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இக்கற்கை நெறியை பின்பற்ற விரும்புவோர் 10-06-93 க்கு முன் எம்மிடம் தங்கள் விண்ணப்பங்களை நேரில் சமர்ப்பிக்கவும்.

ஆ. கமலநாதன்
மல்லாகம் கொத்தணி அதிபர்.

(சி-5012)

## பெரியபுராண சொற்பொழிவு

சிறுப்பிட்டி தனகலட்டிப்பதி
அருள்மிகு செல்லப் பிள்ளையார்
தேவஸ்தானம்
மண்டலாபிஷேக காலத்தில்
(9-6-93 — 18-6-93)

தினமும் மாலை 5 மணி — 6 மணி வரை காரைநகர் கம்பன் கழக அமைப்பாளரும், யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியருமான திரு. த. சிவகுமாரன் அவர்களினால் பெரியபுராண சொற்பொழிவு நடைபெற உள்ளது.

தேவஸ்தான பரிபாலன சபை

(26038)

சாவகச்சேரி நகரசபை

## ஆதனவரி அறிவித்தல்

1993 ஆம் ஆண்டு 2 ஆம் காலாண்டுக்குரிய ஆதன வரியை தண்டமின்றி 30-06-93 ஆம் திகதி புதன் கிழமை பகல் 12.30 மணிவரை செலுத்திக் கொள்ளலாமென்பதையும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்பு செலுத்தப்படும் வரியுடன், வசிப்பிட ஆதனங்களுக்கும், வெற்றுக் காணிகளுக்கும் 15 வீதமும், ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமும் விறாத்துக் கட்டணம் சேர்த்து அறவிடப்படும் என்பதையும் வரியிறுப்பாளர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

எனவே 30-06-93 இற்கு முன் வரிகளைச் செலுத்தி இச்சபையுடன் ஒத்துழைக்குமாறு சகலரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
08-06-93

த. நவரத்தினராசா
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி.
(சி/5230)

மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட
31 குருநகர் மீனவர்களின் ஞாபகார்த்த

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

அரை இறுதியாட்டம்

பாடும்மீன் வி. க. எதிர் சென்மேரிஸ் வி. க.
நேரம்: பிற்பகல் 3. 30 மணி

சென் அன்ரனிஸ் வி.க. எதிர் யங்றோயல் வி.க.
நேரம்: பிற்பகல் 4. 30 மணி

இடம்: குருநகர் விளையாட்டு மைதானம்.

காலம்: 09 - 06 - 1993

(26040)

## சுகாதாரக் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ் மாநகராட்சி மன்ற சுகாதார எழுச்சி வாரத்தை முன்னிட்டு இன்று புதன் கிழமை சுகாதாரக் கருத்தரங்குகளும் வட்டாரச் சுத்திகரிப்பு வேலைகளும் நடைபெறவுள்ளன.

ஈச்சமோட்டை தொடக்கம் வண்ணார்பண்ணை வரையான பகுதிகளில் மொத்தம் 14 இடங்களில் சுகாதாரக் கருத்தரங்குகள் வட்டார சுத்திகரிப்பு வேலைகள் நடைபெறவுள்ளன. (அ)

## பல்கலைக்கழக அனுமதி 1991/92

நீதிமன்ற தீர்ப்பின் படி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பொறியியல். 11, கற்கை நெறிக்கு 29 மாணவர்களும், கணிய அளவீடு (Quantity Surveying) கற்கைநெறிக்கு 17 மாணவரும் மொறட்டுவ பல்கலைக் கழகத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர்ப் பட்டியல், தனிப்பட்ட கடிதங்கள், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. யாழ். பல்கலைக் கழக பரீட்சைக் கிளையுடன் தொடர்பு கொண்டு தங்களது பல்கலைக் கழக அனுமதிக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

பதிவாளர்

(சி/5219)

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்.

## A/L 93

அரசியல்

வினா — விடை

ஆரம்பம்: 12—06—93
சனி, ஞாயி. - 11 மணி
செவ். வியா. - 11 மணி

ஆசிரியர்—
கியூபேட்

[சி/5304]

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வத்திஸ்ரீ நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக ஷூ வைகாசி மீ 29 நாள் (11-06-1993) வெள்ளிக்கிழமை சதய நட்சத்திரமும் சப்தமி திதியும் சித்தயோகமும் கூடிய சுபதினனாளில் நண்பகல் 11 மணி 56 நிமிடம் முதல் 12 மணி 30 நிமிடம் வரையிலான சிங்கலக்ன சுப நன் முகூர்த்தத்தில்,

மா. விஸ்வநாத சர்மா
அவர்களின் கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**செந்திலானந்த சர்மா**
அவர்கட்கும்

சதா. யோகீஸ்வரக் குருக்கள்
அவர்களின்
ஏகபுத்திரி, சௌபாக்கியவதி
**யோகீஸ்வரி**
அவர்கட்கும்

கன்னிகாதான, திருமாங்கல்யதாரண, பாணிக்கிரகணம் செய்யத் திருவருள் கூடி பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் மணமகளில்லத்தில் நடைபெறும் திருமண வைபவத்திற்கு குடும்ப சமேதரராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்தேகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

★ அன்று காலை 7-00 மணிக்கு இலங்கைநாயகி அம்மன் கோவிலில் சமாவர்த்தனம் நடைபெறும்.

★ 14—06—1993 திங்கட்கிழமை மாலை 4-00 மணியளவில் மணமகளில்லத்தில் வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

பிரம்மஸ்ரீ
சதா. யோகீஸ்வரக் குருக்கள்
இராஜேஸ்வரி தம்பதிகள்
''சதா பாக்கியலக்ஷ்மி இல்லம்''
நல்லூர் மார்க்கட், கல்வியங்காடு.

பிரம்மஸ்ரீ
சண்முகநாத சர்மா (சகோதரன்)
கெங்காதேவி தம்பதிகள்
மட்டுவில்,
சாவகச்சேரி.

இருவீட்டார் அழைப்பு

(சி/5228)

நல்லூர் அருள்மிகு ஸ்ரீ மூத்த விநாயகர்
தேவஸ்தான புனராவர்த்தன உத்தம
யாக சப்தா தச (17) குண்ட பிரதிஸ்டா

## மகா கும்பாபிஷேகம் 09 - 06 - 93

சிங்கையாரியச் சக்கரவர்த்தி முதல் சங்கிலி அரசன் காலம் வரை ராஜதானியாகக் கொண்டு அரசாளப் பெற்றதுமான நல்லையம்பதியிலே ஆன்மாக்களுக்கு அனுக்கிரகித் தடத்த வடிவங்கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் அருள்மிகு மூத்த விநாயகர் பெருமானுக்கும் நூதனமூர்த்தியாகிய பஞ்சமுக விநாயகருக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் இன்று காலை 10 45 மணிமுதல் 11.50 வரையுள்ள சுப முகூர்த்தத்தில் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் (தேவஸ்தானக் குருக்கள்) அவர்களால் நடத்தி வைக்கப்படும்.

குறிப்பு: மேற்படி கும்பாபிஷேகம் [17 குண்டம்] யாழ். மாவட்டத்தில் நடைபெறுவது இதுவே முதல் தடவை.

திருப்பணிச்சபை

(26042)

உ
ஸ்கந்தன் துணை
''உண்மையே உயர் அறம்''

## 1994 இல் நூற்றாண்டு விழாக் காணும்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின்
பழைய மாணவர் சங்கம்
நடத்தும்

## பழைய மாணவர் தினமும் வருடாந்த பொதுக் கூட்டமும் 1993 - 1994

04 - 07 - 1993 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

1) பழைய மாணவர் தினமும், மதிய போசனமும்

நேரம் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப 1.00 வரை மதிய போசனத்தில் பங்கு கொள்வோர் 27-06-93க்கு முன்னதாக தலைவர் / செயலாளரிடம் தொடர்பு கொண்டு உரிய பணத்தை செலுத்தும் வண்ணம் அன்பாகக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

2) பொதுக்கூட்டம்

நேரம் பி.ப. 2 00 மணி தொடக்கம்

குறிப்பு:- அங்கத்தவர்கள் தமது வருட சந்தா ரூபா 25 - நிலுவைகளை செலுத்தத் தவறியவர்களும் ரூபா 500/- ஐ செலுத்தி ஆயுட்கால உறுப்பினர்களாக சேரவிரும்புவோரும் 27 - 06 - 93 இற்கு முன்னதாக செயலாளருடன் தொடர்பு கொண்டு பணத்தை செலுத்தி அங்கத்துவ அட்டைகளை பெற்றுக்கொள்ளும் வண்ணம் அன்பாகக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். புதிய அங்கத்தவர்கள் 24 - 06 - 93 இற்கு முன்னதாக தொடர்பு கொள்ளவும்.

3) பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்க இருக்கும் பிரேரணைகள் யாவும் 24 -06 - 93 இற்கு முன்னதாக செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

4) சகல பழைய மாணவர்களும் சங்கத்தில் அங்கத்தவராகி கல்லூரியின் நூற்றாண்டு விழாவை விமரிசையாகக் கொண்டாட தங்களது பூரண ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்
ஆ. மகாலிங்கம்
திருநெல்வேலி.

செயலாளர்
சேது. விபுலானந்தா
சுன்னாகம்.

(சி-2013)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 16 — 03 — 1945



உதிர்வு: 11 — 05 — 1993

## திருமதி விமலராசா இராசமணி

(இளைப்பாறிய குடும்பநல சேவையாளர்
வளலாய் மேற்கு அச்சுவேலி)

(10—6—1993)

11-5-93 இல் காலமான எமது குடும்ப தலைவியின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (10-6-93) வியாழக் கிழமை அச்சுவேலி தெற்கில் நடைபெறும். உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இவ் ஆத்ம சாந்தி வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்
அன்புக் கணவன்:- து. விமலராசா
அன்பு மகன்:- வி. பிரணவன்

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(26035)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுப்பிட்டி தனங்கலட்டிப்பதி உறையும்
# திருவருள் மிகு செல்லப்பிள்ளையார் ஆலய
## ★ மகாகும்பாபிஷேக சிறப்பு மலர் ★ (09 – 06 – 1993)

# புராண படனத்துக்குப் புகழ்பெற்ற செல்லப்பிள்ளையார் கோவில்

ஈழத்திருநாட்டின் தலையாக அமைந்த யாழ் நகரின் வடபால் பருத்தித்துறை வீதியில் எட்டாவது கல் தொலைவில் அமைந்துள்ளது திருவும் கல்வியும் சீரும் சிறப்பும் மிக்க சிறுப்பிட்டிக் கிராமம். அங்கு தனகலட்டி என்னும் திவ்விய திருத்தலத்தில் அடியார்களுக்கு இன்னருள் வாரி வழங்கும் எம் அப்பனான செல்லப்பிள்ளையார் கோவில் கொண்டருளியுள்ளார். ஞானமுதல்வனான விநாயகனை பிரணவ வடிவிலே கண்டு வழிபடும் வழக்கம் ஈழநாட்டிலும், தமிழ் நாட்டிலும் எமது கலாசாரம் பரவியுள்ள நாடுகளிலும் சிறப்பாகப் பேணப்படுகின்றது.

விநாயகர் எல்லோரிலும் மேலான தலைவர். விநாயகருக்கு யானைமுகமும் மூன்று விழிகளும், ஐந்து திருக்கரங்களும் உண்டு. அவரது திருமுகம் 'ஓ' வடிவமான பிரணவ வடிவமாய் உள்ளது. கயமுகன் என்னும் அரக்கனைச் சங்கரித்து தேவர்களுக்கு அருள் கொடுத்த மூர்த்தமே விநாயக மூர்த்தமாகும். பிள்ளையார் தன்னை நம்பி வேண்டுவோருக்கு வேண்டுவன அருளுவார்.



எங்கள் நாட்டிலே பிள்ளையார் கோவில் இல்லாத ஊரே இல்லை என்று சொல்லி விடலாம். விநாயகப் பெருமானின் புராதன ஆலயங்களிலொன்று யாழ்ப்பாணத்தை ஆண்ட பரராசசேகர மன்னன் காலத்து அவர் மைத்துனரும் புலவருமான இரகுவம்ச காவியத்தை தமிழிலே தந்த அரசகேசரியினால் நீர்வேலியில் அமைக்கப்பெற்ற அரசகேசரிப்பிள்ளையார் கோவில். அதனை அடுத்து சிறுப்பிட்டி-நீர்வேலி எல்லையில் அமைந்தது வாய்க்காற்தரவைப் பிள்ளையார் ஆலயம். சிறுப்பிட்டி தனகலட்டி திவ்விய திருத்தலம் 1884 ஆம் ஆண்டளவில் எம் முன்னோரால் அமைக்கப்பட்டதாக அறியக்கிடக்கின்றது.

### புராணபடனத்துக்கு பெயர்பெற்றது

நம்முன்னோர் அளித்த அரும்பெரும் செல்வங்களான கோவில் வழிபாடும் சைவசமய பாரம்பரியங்களும், புராண படனமும், கலை கலாசாரங்களும் பேணப்படும் களமாக கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக எமது செல்லப்பிள்ளையார் ஆலயம் விளங்கி வந்துள்ளது.

முக்கியமாக ஆறுமுகநாவலர் தொடக்கி வைத்த கந்த புராண கலாசாரத்தில் அவர் மருகர் பொன்னம்பலபிள்ளையை அழைத்து தேன் சொட்டச் சொட்ட அவர் விரிவுரைகளை இப்பகுதி மக்களுக்கு அளித்த நிகழ்வுகளைக் குறிப்பிட்டேயாக வேண்டும். பண்டிதமணி கணபதிப்பிள்ளை தமது இளம் வயதில் புராண படன நிகழ்வுகளில் இங்கு கலந்து கொண்டதாகவும் பெரியோர்கள் கூறக் கேட்கிறோம்.

சிறுப்பிட்டிக் கிராமத்தவருக்கு மட்டுமல்ல நீர்வேலி, புத்தூர், ஆவரங்கால் ஆகிய அயல் கிராமங்களிலிருந்து திரண்டு வரும் பெருந்தொகையான பக்தர்களுக்கு அருள் மழை பொழியும் எம் அப்பன் விநாயகப் பெருமானின் அற்புதங்கள் சொல்லும் தோறும் உடம்பு புல்லரிக்கும். குறிப்பாக கிராமத்தின் ஓர் உயர்ந்த பதவியிலிருந்த ஓர் உபயகாரர் தனது மறுநாள் திருவிழாவை சிலரிடையில் ஏற்பட்ட சிறுசச்சரவு காரணமாகச் செய்யமாட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

— வே. சந்திரசேகரம்பிள்ளை
(தலைவர், ஆலய பரிபாலன சபை)

## விநாயகன் திருவருள் பொலிக!

சைவச் செம்மனச் செல்வர்களே!

சிறுப்பிட்டி செல்லப் பிள்ளையார் ஆலய மகாகும்பாபிஷேகம் நிகழவிருப்பதறிந்து, பெருமகிழ்ச்சியடைகிறோம். கும்பாபிஷேகம் காண்பது கோடி புண்ணியம். மற்றும் சாதாரண விழாக்கள் போலல்லாது பன்னிரு வருடங்களுக்கு ஒரு முறை எடுக்கப்படும் இப்பெருவிழா தவமுடையார்க்கே தரிசிக்க சாத்தியமாகும்.

அதுவும் பிரணவ சொரூபியும், தனக்கு மேலான நாயகனில்லா விநாயகப் பெருமானுக்கு நாமெடுக்கும் கைங்கரியங்களெல்லாம் உச்ச நிலை வகிப்பன. எமது பிழைகளை எல்லாம் பொறுத்தருளும் கருணாமூர்த்தியான ஞானக் களஞ்சியம். மிக எளிய முறையில் பூசிக்கப்படுபவருமவரே.

கும்பாபிஷேகத்தின் உட்கருத்து, மூலமூர்த்தியின் அருபிரவாகத்தை மீண்டும் பெருகச் செய்வதே. இவ்விழா சிறப்புற, நிறைவுற நிதியுதவி செய்தும் இயன்ற தொண்டுகள் புரிந்த அன்பர்கள் அனைவரையும் பாராட்டுகிறோம்.

எல்லோருக்கும் விநாயகப் பெருமான் திருவருள் பொலிகவென வேண்டி எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.

## கணபதி பூசை கைமேற்பலன்

சிறுப்பிட்டி தனகலட்டிப்பதி செல்லப்பிள்ளையாருக்கு திருக்குடமுழுக்கு விழா நடைபெற விருப்பது மிகவும் உவகை தரும் நிகழ்ச்சியாகும். இன்று எமது நாட்டில் எத்தனையோ ஆலயங்களில் எல்லாம் இத்தகைய வைபவங்கள் நடைபெற்று வருவது சைவமக்களின் புண்ணிய பயனாகும். இறைபணி ஆற்றும் வாய்ப்பு பலபிறவிகளில் ஈட்டிய புண்ணியத்தாலேயே கிடைக்கிறது.

விநாயக மூர்த்தம் வழிபாட்டில் முதல் மூர்த்தமாகும். வழிபாடு செய்ய எம்மை ஆயத்தப்படுத்தி விடுபவர் விநாயகர். குட்டிக் கும்பிடும் நோக்கமே இது தான். ஆலயங்களனைத்தும் எமக்காகவே ஏற்படுத்தப்பட்டவை உலக இயக்கம், மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஓர் ஆற்றலாலே நடைபெறுகிறது என்பதை ஆலயங்களின் மூலம் நாம் அனுபவித்துக் காண முடியும். எனவே இவற்றைக் கண்ணெனப் போற்றி வளர்ப்பது சைவ மக்களின் தலையாய கடனாகும்.

சிறுப்பிட்டி வாழ் சைவ மக்கள் சைவப் பற்றும், தமிழ்ப் பற்றும் மிக்கவர்கள். செல்லப்பிள்ளையாரிடத்திலே நீங்காத நம்பிக்கை கொண்டவர்கள். இதனாலேயே இப்பெருமானுக்கு நடைபெறும் குடமுழுக்குக் காணும் பெரும்பேறு பெறுகின்றனர்.

"சிந்தனை செய்ய மனம் அமைத்தேன்
செப்ப நா அமைத்தேன்
வந்தனை செய்யத் தலை அமைத்தேன்
கை தொழ அமைத்தேன்
பந்தனை செய்ய அன்பமைத்தேன்
மெய் அரும்ப வைத்தேன்
வெந்த வெண்ணீறணி ஈசற்கு
இவையான் விதித்தனவே"

எனவே ஆலய வழிபாடும் அறப்பணிச் செயற்பாடும் எமது மானிடப் பிறவியைத் தூக்கிவிடும் சக்தி வாய்ந்தவை என்பதை உணர்ந்து செல்லப்பிள்ளையார் திருவடி நினைப்பில் பேரின்பங் காண முயல்வோமாக!

தங்கம்மா அப்பாக்குட்டி,
தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

## கும்பாபிஷேக நிகழ்ச்சிகள்

இன்றைய கும்பாபிஷேகக் கிரியைகள் காலை 8 30 மணிக்கு ஆரம்பமாகும்.

10. 38 மணிக்கும் 11. 48 மணிக்கும் இடையில் கும்பாபிஷேகம் நடைபெறும்.

கும்பாபிஷேக விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமியின் அருளுரையும், சிந்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. இ. ஜெயராஜ் ஆகியோர் சிறப்புரையும் நிகழ்த்துவர்.

நாதஸ்வரமேதை என்.கே. பத்மநாதன் குழுவினர் மற்றும் எஸ். சிதம்பரநாதன் குழுவினரின் நாதஸ்வர இசையும், அமரர் என். ஆர். கோவிந்தசாமியின் புதல்வர்களின் நாதஸ்வர, தவில் இசைகளும் கும்பாபிஷேக வேளையில் இடம்பெறும்.

இன்று 9ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதிவரை காரை நகர் கம்பன்கழக அமைப்பாளர் சிவகுமாரன் பெரிய புராண தொடர் விரிவுரை நிகழ்த்துவார்.

48 நாள் நடைபெறும் மண்டலாபிஷேகத்தின் போது மற்றும் பலரின் சமயச் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

(அ)

## தெய்வீக கைங்கரியம் சிறப்புறுக!

பிரணவ சொரூபியாம் விநாயகப் பெருமான் எழுந்தருளியிருக்கும் சிறுப்பிட்டி தனகலட்டிப்பதி செல்லப்பிள்ளையார் ஆலயத்தில் மகாகும்பாபிஷேம் நடைபெறுவது பேருவகைதரும் செய்தியாகும். காலத்துக்கு காலம் மகாகும்பாபிஷேகம் செய்வது சைவ மக்களின் மரபாகும். அவ்வழியில் சிறுப்பிட்டி செல்லப்பிள்ளையார் ஆலயத்திலும் இவ்வாண்டு வைகாசி மாதம் 27ஆம் நாள் மகாகும்பாபிஷேகம் இடம் பெறுகிறது. இத் தெய்வீக கைங்கரியங்களில் ஈடுபட்ட விநாயகர் அடியார்களுக்கு எம்பெருமான் திருவருள் கிட்டுவதாக.

இந்த நல்ல வேளையில் மலர் ஒன்று வெளியிடப்படுவது மிகவும் பொருத்தமானது மட்டுமன்றி சைவ மக்கள் அனைவரும் விருப்பத்தக்கதுமாகும்.

நிகழ்வுகள் செவ்வனே நிறைவேறப் பிரார்த்திக்கின்றேன்.

கா. மாணிக்கவாசகர்,
அரச அதிபரும், மாவட்ட செயலாளரும்,
யாழ் மாவட்டம்.

## எல்லா நலன்களும் அருளுவார்

சிறுப்பிட்டி அருள்மிகு மகா கணபதிப்பிள்ளையார் எல்லோருக்கும் செல்லப்பிள்ளையாராக விளங்குகின்றார். இவர் சிவபெருமானுடைய மூத்த பிள்ளை. ஆதலினால் மூத்த பிள்ளையார் என்றே அழைக்கப்படுகின்றார்.

சிறுப்பிட்டி பேரளவில் சிறியதாயிருந்தாலும் செல்லப்பிள்ளையாரின் மகிமையினால் மக்கள் உள்ளத்தில் பெரும்பிட்டியாக மாறி உள்ளது. சிறுப்பிட்டி வாழ் மக்கள் இன்று சீரும் சிறப்புமாக வாழ்கின்றார்கள் என்றால் அது செல்லப்பிள்ளையாரின் மகிமை என்றே உறுதியாகக் கூறலாம்.

பிள்ளையார், பக்தர்கள் எல்லோருக்கும் செல்லமாக இருப்பதோடு செல்வம் கொழிக்கும் பிள்ளையாராக இருப்பதனால் செல்வப் பிள்ளையார் என்று அழைக்கப்படுகின்றார். அவர் செல்வத்தைப் பக்தர்கள் மூலம் வாரிவழங்கியிருக்காவிட்டால் இக்கட்டான இன்றைய நிலையில் கும்பாபிஷேகம் நடத்த முடியுமா?

திருத்தலத்தின் பெயரே தனகலட்டி என்பது. தனம் என்பது செல்வம் அல்லவா? இக் கும்பாபிஷேக தினத்திலே விநாயகப் பெருமான் தனம் மாத்திரம் அல்ல, தளர்வறியா மனத்தோடு தமிழீழமும் அளிப்பார் என்பது நம்பிக்கை. தும்பிக்கையான் பாதத்தை நம்பிக்கையோடு வணங்கினால் எல்லா நலன்களும் அருளுவார் என்பது நமது முன்னோர் கண்ட முடிவு

அருள்மிகு செல்லப்பிள்ளையார் தம்மை நாடிவந்தவர்கள் எல்லோரையும் கைதூக்கி விடுவாராக! என்று பிரார்த்திக்கின்றேன்.

"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து"

— ஆத்மஜோதி நா. முத்தையா.

விளம்பர இலக்கம் (26027)

வித்தக விநாயகன் விரைகழல் சரணே!

பிள்ளையார்
வர்த்தக நிலையம்,
சிறுப்பிட்டி.

ஸ்ரீ கிருஷ்ணா
அரைக்கும் ஆலை,

முருகன்
வர்த்தக நிலையம்,
சிறுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

உருத்திர வீணை விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: Dr. சபாரத்தினம் மூளாய் வீதி, (மாவடிச் சந்திக்கு அருகில்) வட்டுக்கோட்டை. (26032)

### மணமகன் தேவை

வயது 36, பரணி நட்சத்திரம், சிங்க லக்கினம், 7இல் செவ்வாய், கிரகபாவம் 39/16 உள்ள கொழும்பில் அரச கூட்டுத்தாபனத்தில் பணிபுரியும் அழகிய பெண்ணுக்கு மணமகன் தேவை. கொழும்பில் குறைந்த வாடகையில் வதிவிட வசதியும் உண்டு. இல 907, மே/பா, உதயன், (6236)

### ENGLISH

English Grammar for G. A. Q (E S L), Spoken Engiish G C.E. (O/L), விரிவான விளக்கத்துடன் ஆங்கிலம் தனிப்பட்ட முறையிலும், பொதுவாகவும் கற்பிக்கப்படுகிறது. Mr. R. Sivaligam (Dip – in – English புதிய ஆங்கிலக் கல்வி நிலையம், ஆரியகுளம், யாழ்ப்பாணம். (சி 4799)

### காணவில்லை

பிறவுண், கறுப்பு கலந்த அல்ஷேசன் (பெரியது) பெண் நாயை 05-06-1993 முதல் காணவில்லை. நாயைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். செ. முத்துக்குமாரு, இல: 802/1, பலாலி றோட், திருநெல்வேலி. சன்மானம் கொடுக்கப்படும். (26026)

### WATER PUMP

பாவனையில் உள்ள Robin EY-15 நீர் இறைக்கும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பொ. துரைஐயா, பிள்ளையார் கோவிலடி, நவற்கிரி, புத்தூர். (6238)

### வகுப்புகள்

City and Guilds of London Institute, 627 Quantity Surveying – Part - I வகுப்புக்கள் 07-06-93 இல் ஆரம்பமாகி திங்கள் புதன் கிழமைகளில் காலை 6-30 — 8-30க்கு நடைபெறும். து. விசாகபதி, பாடசாலை ஒழுங்கை, தாவடி. [25942]

### தவறிவிட்டது

பேர்ஸ்டன் நான்கு அலுவலகத் திறப்புகள் கொண்ட கோர்வை 07-06-93இல் ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல: 20, சென். பீற்றர்ஸ் லேன், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (26033)

### வெளிவந்துவிட்டது

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் மீள் பார்வையுடன் கூடிய சைவ நெறி ஆண்டு 8. ஆக்கம்: க. சந்திரசேகரம், கைதடி குத்துக்குமார சுவாமி ம. வி. வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம். ஏகவிநியோகஸ்தர்கள் சோதி புத்தகசாலை, மீன் சந்தை முன்பாக பஸ் நிலையம், சாவகச்சேரி. (சி 5222)

## ஏற்புத் தடுப்பூசி

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஏற்புத் தடுப்பூசி மருந்து மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மிக அவசியமான நோயாளருக்கு மட்டுமே ஏற்றப்பட்டு வருகிறது. (த-87)

ENGLISH

## O/L-G.A.Q

புதிய பிரிவு

ஆரம்பம்: 10 — 06 — 1993 (வியாழன்)

By R. SIVALINGAM (Dip – in – English)

**NEW ENGLISH ACADEMY**

ஆரியகுளம், யாழ்ப்பாணம். (சி-5303)

## யாழ். மாணவர்களுக்கு நற்செய்தி!

கம்பியூட்டர் யுகத்தில் பிரவேசித்து சர்வதேச சமூகத்துடன் இணைந்து கொள்ள அரிய வாய்ப்பு.

"உங்களுக்கென ஆரம்பிக்கப்படவுள்ள கம்பியூட்டர்" பயிற்சி வகுப்புகள்.

**Introduction to Computer And Basic Language**

(3 மாத கால பயிற்சி நெறி)

ஆரம்பம்: 14-06-1993

- ★ வகுப்புகள் திங்கள், புதன், வெள்ளி- (3-00—4-30) p.m.
- ★ ஆண்டு 10, O/L, A/L மாணவர்களுக்குகான- பயிற்சி
- ★ இலகு பயிற்சி நெறி, தமிழ் விளக்கத்துடன் கூடியது.
- ★ கட்டணம் தவணை முறையில்.
- ★ கூடிய செய்முறைப் பயிற்சி, பெறுமதி மிக்க சான்றிதழ்.

விவரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, ST. PETER'S LANE,
JAFFNA.
(சி/5302)

உ
சிவமயம்

## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

விநாயகர் கிருபையை முன்னிட்டு நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் வைகாசி மாதம் 28 ஆம் நாள் (10-06-93) வியாழக்கிழமை முற்பகல் 10-50 மணி முதல் 12-50 மணி வரையுள்ள சிங்கலக்கின சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எமது ஏக புத்திரன் | எமது கனிஷ்ட புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **செல்வச்சந்திரன்** | **சுகந்தி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் சமூகம் தந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து மணமகன் இல்லத்தில் நடைபெறும் விருந்து உபசாரத்திலும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்.

திரு. திருமதி முத்துலிங்கசாமி
தபாற்கந்தோர் அருகில்,
வல்வை.

திரு. திருமதி (டாக்டர்) இராசையா,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

[26022]

## குரக்கன் கொள்வனவு

விதைப்பதற்கு உகந்த குரக்கன் பெருமளவு கொள்வனவு செய்யப்படும்.

தொடர்பு: சந்தைப்படுத்தும் பிரிவு
பனை அபிவிருத்திச் சபை,
53, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-5227)

வண்ணை ஸ்ரீவீரமாகாளி அம்மன் தேவஸ்தான

## மஹோற்சவம்

### சிவசக்தி மகிமை தெய்வீக விரிவுரை

இடம்: வண்ணை ஸ்ரீவீரமாகாளி அம்மன் தேவஸ்தானம் யாழ். நகர்

காலம்: இன்று 09 - 06 - 1993 தொடக்கம் 03 - 07 - 1993 வரை

நேரம்: தினசரி இரவு 7மணி தொடக்கம் தினசரி இரவு 8மணி வரை

தெய்வீக விரிவுரை வழங்குபவர்:


மெஞ்ஞான வாரிதி
திரு. குமாரசாமி சண்முகநாதன்
அவர்கள் (முதுமாணி)
(அதிபர் யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயம்)

இத்தெய்வீக விரிவுரையைக் கேட்டு இன்புறும் வண்ணம் அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

— பரிபாலன சபை.

(26034)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் குமாரசூரியர் வாமதேவன்

(இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்.)

தோற்றம்: 27—05—1925 மறைவு: 21—05—1992

திதி:- 09—06—1993

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே! எம்மை வாழ வைத்த அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி ஆண்டு ஒன்றாகி விட்டது. ஆனால் எம் நெஞ்சில் பற்றிய வேதனைத் தீ எம் இதயத்தில் என்றுமே அணையாது.

உமது ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும்.
மனைவி, மகள்.

திருநெல்வேலி வடக்கு. (26023)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீசாலை தெற்கு ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோவில்
# மகாகும்பாபிஷேக சிறப்பு மலர்
## (09 — 06 — 1993)

## இவர்கள் வாழ்த்துகிறார்கள்

### நல்லை ஆதீன முதல்வர்

அருளோங்கும் சைவ மெய்யன்பர்களே!

மீசாலை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி தேவஸ்தான மஹாகும்பாபிசேகம் நிகழவிருப்பதறிந்து பெரிதும் மகிழ்வுறுகிறோம் கும்பாபிஷேகம் காண்பது கோடி புண்ணியம். மற்றைய சாதாரண விழாக்கள் போலல்லாது பன்னிரு வருடங்களுக்கொருமுறை எடுக்கப்படும் இப்பெருவிழா தரிசிப்பது புண்ணியசீலர்களுக்கே வாய்புடைத்தாம். கலியுகவரதனாம் முருகப்பெருமானுக்கு நாம் ஆற்றும் கைங்கரியங்களெல்லாம் அதி உயர் ஸ்தானம வகிப்பன. ஒருமையுடனும் திரிகரண சுத்தியுடனும் அவரின் திருவடிகளை இறுகப் பற்றிக்கொண்டால் எம்மைத் துயர், துன்பங்கள் பற்றா. அனுபவ ரீதியில் உணர்ந்துகொள்ள வேண்டிய உண்மை இது.

இவ் விழாவுக்கு பிரதிஷ்டா பிரதம குருவாக சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் அமையுறுவதையும் அவர்க்குத் துணையாக பிரபல சிவாச்சாரியார்கள் சேர்ந்திருப்பதையும் மிகவும் பாராட்டுகிறோம் இவ்வூர் வாழ் மக்களின் தெய்வ பக்தி, ஒற்றுமை, ஒத்துழைப்பு ஆகிய உயர் பண்புகளுக்கு இவ்விழா ஓர் எடுத்துக்காட்டு. இப்பெருவிழா செவ்வனே நிறைவுற நிதி ஈய்ந்தும், சுயநலமிலா தொண்டுகள் புரியும் அன்பர்களையும் உளமார வாழ்த்தி எல்லோருக்கும் முருகப் பெருமான் திருவருள் வேண்டி எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

-ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம்

### பிரதிஷ்டா பிரதம குரு

சாவகச்சேரி மீசாலை தெற்குப்பதியில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி என்னும் மூர்த்தி "கருணை கூர் முகங்களாறும், கரங்கள் பன்னிரண்டும் கொண்டே ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலக முய்ய" வந்து குடிகொண்டனன்.

தன்னை அணுகி இரங்கும் ஆன்மாக்கள் பால் சித்திர வேலாயுதராகிக் கருணைகூர்ந்து காக்கும் முருகப்பெருமானுக்கு இன்று தெய்வீகப் பெருவிழா பஞ்ச குண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகம்.

ஆன்மாக்கள் லயிக்கின்ற ஆண்டவனின் இல்லம் காலாகாலத்தில் புனருத்தாரணம் பெற்று புனிதத்தோடும், சிறப்போடும் பொலிவு பெற வேண்டும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையாவது ஒரு ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட வேண்டுமென்பது ஆகமப் பிரமாணம். இதனை அகத்தே கொண்ட பரிபாலன சபையினர். இவ்வூர் வள்ளலார்களுடனும், அடியவர்களுடனும் இணைந்து இக் கைங்கரியத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

இப்பரிபாலன சபையினருக்கும், இக் கும்பாபிஷேக விழாவில் கலந்துகொண்டோர்க்கும் மற்றுமெல்லோர்க்கும் ஆறுமுக வள்ளலின் நல்லருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"லோகா சமஸ்தா ஸுகினோ பவந்து"

-சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள்

## மூன்று நூற்றாண்டு காலமாக முருகன் அருள்பாலிக்கும் தலம்

கலியுக வரதனாம் கந்தக் கடவுள் வேண்டுவோர்க்கு வேண்டுவன ஈந்து வள்ளி தேவசேனா சமேத சித்திர வேலாயுத சுவாமியாகவும், சண்முகமூர்த்தியாகவும், அருள்புரிந்து கொண்டிருக்



கும் இந்த ஆலயம் இற்றைக்கு சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பதாகக் கந்தர் அம்பலவர் என்னும் பெரியாரால் மடாலயமாக அமைத்து வழிபட்டு வரப்பட்டும், பின்னர் அன்னாரின் வழித்தோன்றலான கந்தர் முதலித்தம்பி என்னும் பெரியாரால் புனருத்தாரணம் செய்யப்பட்டு ஆகமவிதிப்படி அமரர் சித்தன்கேணி சிவஸ்ரீ அ. குமாரசாமிக் குருக்கள் அவர்களால் 1960ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் செய்து வைக்கப்பட்டது.

1975இல் ஷெ ஆலயத்தின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்குமாக சுற்றாடலில் உள்ள ஊர்மக்களின் பேருதவியுடன் ஆலய பரிபாலன சபை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அன்று தொட்டு முருகப் பெருமானின் நித்திய நைமித்திய பூசைகளையும் மற்றும் உற்சவங்களையும் சிறப்புற நடத்தி வந்த பரிபாலனசபை தற்போது ஸ்தம்ப மண்டபம், வெளிமண்டபம், வாகன சாலை, சுற்றுப் பிரகாரமதில் முதலாம் இன்னோரன்ன திருப்பணிகளைப் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் புதியதான ஆறுமுகசாமி, வள்ளி தேவசேனா, மூர்த்திகளும் பாலமுருகன், சண்டேஸ்வரர் முதலிய பரிவார மூர்த்திகளும் பொது மக்களின் பேருதவியுடன் அமைத்து அவற்றுக்குரிய புனராவர்த்தன நூதனப் பிரதிஷ்டைகளைச் செய்து கும்பாபிஷேகம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

— கே. கே. யோகநாதன் —
(ஆலய பரிபாலன சபை சார்பில்)

( 6ஆம் பக்கம் பார்க்க)

### இன்றைய நிகழ்வுகள்

இன்றைய கும்பாபிஷேகக் கிரியைகள் அதிகாலை 4 மணிக்கு ஆரம்பமாகும்

காலை 5 30 மணிக்கும் 6. 16 மணிக்கும் இடையிலான சுப வேளையில் மகா கும்பாபிஷேகம்.

கும்பாபிஷேக விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமியின் அருளுரையும், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புரையும், ஆத்மஜோதி நா. முத்தையா வாழ்த்துரையும் நிகழ்த்துவார்கள் (அ)

### மண்டுவில் அம்மன் ஆலய பிரதமகுரு

நம் ஈழத்திரு நாட்டில் அமைந்துள்ள சைவாலயங்களில் பெரும்பாலாகக் காணப்படுபவை முருகப் பெருமானது திருக்கோவில்களே. மூர்த்தி, கீர்த்தி, தலவிசேடம் இத்தியாதி தனிச் சிறப்புக்களை அவைகள் ஒவ்வொன்றும் கொண்டிருக்கின்றன. ஆலயங்கள் ஸ்வாயம்புகம், ஆர்ஷம் தைவதம், மானுஷம் என நால்வகையாகவும் கும்பாபிஷேகப் பிரதிஷ்டை, அனாவர்த்தனம், ஆவர்த்தனம் புனராவர்த்தனம், அந்தரிதம் என நால்வகையாகவும் அமையும்.

இவ் வகைகளில் மானுஷவகையினதாகவும், அமைந்து தனிச் சிறப்புப் பெற்ற கலியுக வரதனாம் கந்தப் பெருமான் கோவில் கொண்டெழுந்தருளி அருள் பாலித்துக் கொண்டிருக்கும் அருள் மிகு மீசாலை தெற்கு சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் மண்டபங்களையும், கர்ப்பக் கிருகத்தையும் சீர்திருத்திப் புதுப் பொலிவுடன் அலங்கரித்தும், ஆகம விதிப்பிரகாரம் வள்ளி, தேவசேனா சமேத சுப்பிரமணியர் மற்றும் ஆறுமுகசுவாமிகள் முதலிய புதிய மூர்த்திகளையும் சிறப்புற அமைத்துப் பரிபாலன சபையினர் திருவோண நக்ஷத்திரமும், மிதுன லக்னமும் அமைந்த நல்ல முகூர்த்தத்தில் இன்று கும்பாபிஷேகத்திற்கும் ஒழுங்கு செய்துள்ளார்கள்.

இவ்வகையில் முருகப் பெருமானது கும்பாபிஷேகத் திருத்தொண்டில் ஈடுபட்டுத் தொண்டாற்றும் பக்த கோடிகளைப் பாராட்டுவதுடன், எல்லாம் வல்ல முருகப் பெருமான் அனைவருக்கும் சகல சித்திகளையும் வழங்கி அருள் புரிவானாக எனப் பிரார்த்தித்துத் திரிகரண சுத்தியுடன் ஆசி கூறுகின்றேன். சுபமஸ்து.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சிவஸ்ரீ க கிருபானந்தக் குருக்கள்

விளம்பர இலக்கம் (சி-5226)

## கடலேரியைக் கடப்பவர்களை கைதுசெய்வதுசாத்தியமில்லை

### பிரிகேடியர் நளின் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 6

கிளாலியில் இரவு நேரமே படகுச் சேவைகள் இடம் பெறுகின்றன. அத்துடன் புலிகளும் இப்படகுகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்கிறார்கள். இப்படியான நேரத்தில் தடைச் சட்டத்தை மீறி கடலேரியைக் கடப்பவர்களைக் கைது செய்வது சாத்தியப்படுமா?

இராணுவப் பேச்சாளர் நளின் அங்கம்மன சமீபத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு கூறினார்.

கிளாலிக் கடலேரியைக் கடப்பவர்களைக் கைது செய்வது சாத்தியப்படாதா? என்ற செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே நளின் அங்கம்மன மேற்கண்டவாறு கூறினார்.

கடற்படையினரை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படும் வரை கடற்படையினர் வாளாவிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா? புலிகளின் தாக்குதல்கள் காரணமாக கடலேரியில் கடற்படையினர் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பிரிகேடியர், மேலும் தெரிவிக்கையில், கிளாலிக் கடலேரியில் பகல் நேரங்களில் ஒரு படகையாவது காண இயலாது

இருட்டில் நடைபெறும் படகுச் சேவைக்கு புலிகள் பாதுகாப்பு அளிக்கிறார்கள். இதற்காக படகுச் சேவையைப் பயன்படுத்துபவர்களிடமிருந்து பெரும் தொகைப் பணம் அறவிடப்படுகிறது. படகுச் சேவையைப் பயன்படுத்துவோர் சிவிலியன்கள் என்று காணப்பட்டால் தாக்குதல் நடத்தப்படுவதில்லை என்றும் அவர் கூறினார்.

(இ-1)

## கறுப்பு - வெள்ளைப் படம் மட்டுமே பாஸ்போர்ட்டுக்கு

### நேற்றுமுதல் நடைமுறையில்

கொழும்பு, ஜூன் 9

பாஸ்போர்ட்டுகளுக்கு கறுப்பு—வெள்ளைப் புகைப் படங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். வர்ணப் புகைப்படங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

இந்த நடைமுறை நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளதாக குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

வர்ணப் புகைப்படங்கள் மோசடி செய்யச் சுலபமானவை என்பதாலே இந்த புதிய நடைமுறை அமுலுக்கு கொண்டுவரப் பட்டது. (ஓ)

## சாயிபாபா கொலை முயற்சி: நரசிம்மராவ் அதிர்ச்சி

சத்தியசாயிபாபாவைக் கொலை செய்ய முயற்சித்த சம்பவம் குறித்து பிரதமர் நரசிம்மராவ் அதிர்ச்சி தெரிவித்திருக்கிறார்.

சத்தியசாயி உலக சேவை அறக்கட்டளை நிறுவனத் தலைவர் கேர்ணல் ஜோகாராவுடன் நேற்று முன் தினம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட பிரதமர் சாயிபாபாவின் நலன் குறித்து விசாரித்தார்.

தமிழக ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டியும் இந்த சம்பவம் குறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் —

சாயிபாபாவை கொலை செய்ய முயன்ற வன்முறையாளர்கள், மெய்க்காப்பாளர்கள் இருவரை கத்தியால் குத்திக் கொன்ற பின்னர், ஓர் அறைக்குள் ஓடி ஒளித்து கதவை தாழிட்டுக் கொண்டனர் என்றும் —

பொலீஸார் கதவை உடைத்து கொலைஞர்களை பிடிக்க முயன்றபோது அவர்கள் பொலீஸாரை தாக்க முயன்றனர் என்றும் —

அப்போதே அவர்களைப் பொலீஸார் சுட்டுக் கொன்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஓ 3)

## ஊற்றும் இணைந்தது

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் ஊற்று நிறுவனமும், ஓர் அங்கத்தவராக சேர்க்கப் பட்டுள்ளது.

இதனையும் சேர்த்து யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் மொத்தம் 15 நிறுவனங்கள் அங்கம் வகிக்கின்றன.

(த-87)

## இசை, இலக்கிய விழாக்கள்

குருநகர், ஜூன் 9

யாழ். திருமறைக்கலா மன்றம் இம் மாதம் நடுப்பகுதியில் இசைவிழாவையும், பிற்பகுதியில் இலக்கிய விழாவையும் சிறப்பாக நடத்த ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது

இம்மாதம் 18, 19, 20 ஆம் திகதிகளில் இசை விழாவும், 25, 26, 27 ஆம் திகதிகளில் இலக்கிய விழாவும் நடைபெறவுள்ளன. (ஓ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிகளைத் திருத்த ரூ. 15 லட்சம் ஒதுக்கீடு

## 500 தார் பரல்களுக்கும் அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 9

குடாநாட்டில் உள்ள பிரதான வீதிகள் சிலவற்றை செப்பனிடுவதற்காக வீதி அதிகார சபைக்கு 15 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக திருத்தப்படாமல் மிக மோசமான நிலையில் உள்ள பிரதான வீதிகளை திருத்துவதற்கு இந்த நிதி பயன்படுத்தப்பட இருப்பதாக அறியவருகிறது.

இதேவேளை— வீதிகளை செப்பனிடுவதற்குத் தேவையான தாரின் ஒரு பகுதி 'குமாரி' கப்பல் மூலம் இங்கு வந்து சேர்ந்துள்ளது.

மொத்தம் 500 தார் பரல்களை யாழ். மாவட்டத்துக்கு கப்பல் மூலம் எடுத்து வர யாழ். அரச அதிபருக்கு கூட்டுப்படைகள் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது.

இவற்றில் 225 பரல்கள் ''குமாரி'' கப்பல் மூலம் இங்கு எடுத்துவரப்பட்டுள்ளன. எஞ்சிய தார் பரல்கள் விரைவில் கப்பல் மூலம் இங்கு எடுத்துவரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

யாழ். ஆஸ்பத்திரியில்

# எக்ஸ்றே பிலிம் தட்டுப்பாடு: நோயாளர்கள் பாதிப்பு

யாழ். ஆஸ்பத்திரியில் எக்ஸ்றே பிலிம்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதால், எக்ஸ்றே எடுக்கும் நோயாளர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த மாதம் கொழும்பில் இருந்து குறைந்தளவு பிலிம்களே யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

கடைசியாக அனுப்பிவைக்கப்பட்ட பிலிம்கள் எல்லாம் சிறிய அளவைக் கொண்டவை என்றும், அதனால் பெரிய அளவிலான எக்ஸ்றே படங்களை எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அவசர நோயாளர்களுக்கு மட்டுமே எக்ஸ்றே படங்கள் எடுக்க முடியும் என்றாலும், இரு வாரங்களுக்கே அவை போதுமானவை என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-15)


# நன்றி நவிலல்

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் மாகோற்சவ காலத்தில் எமக்கு உதவி நல்கிய அந்தணர்களுக்கும், மாகோற்சவ உபயகாரருக்கும், பண்ணிசை வழங்கியோருக்கும், பக்கவாத்தியம் வழங்கியவர்களுக்கும், செஞ்சிலுவை சங்க வலி-வடக்கு பிரிவினருக்கும், சென். ஜோன்ஸ் படைப்பிரிவினருக்கும், அளவெட்டி, மல்லாகம் ப. நோ. கூ. சங்கத்தினருக்கும், தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் அவர்களுக்கும், அளவையூர் வர்த்தகர்களுக்கும், மில்க்வைற் அதிபர் அவர்களுக்கும், அருணோதயாக் கல்லூரி தொண்டர் மாணவர்களுக்கும், பல வழிகளிலும் வாகன உதவி வழங்கியவர்களுக்கும், அன்னதானத்திற்கு உதவியவர்களுக்கும், ஒழுங்கு முறைகளை கடைப்பிடித்து வழிபாடு செய்த அடியார்களுக்கும் எமது மனமார்ந்தத் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்,
ஆலய தர்மகர்த்தா சபையினரும்,
தொண்டர் சபையினரும்.

(6241)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் க. லம்போதரன்

(ஓய்வு பெற்ற அரச கணக்காளர்)

தோற்றம்: 08 — 11 — 1931

மறைவு: 21 — 05 — 1992

திதி:- 09—06—1993

முதற் தெய்வமாம் விநாயகரையும், குல தெய்வமாம் வீர பத்திரரையும் சிந்தையில் இருத்தி வையகத்தில் வாழ் வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துடன் சேர்க்கப்பட்டிருக்கும் எமது பாச மிக்க குடும்பத் தலைவன் என்றும் எங்கள் காவல் தெய்வமாய் இருக்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி,
சகோதர, சகோதரிகள்.

126/4, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(2598)

# கடந்த சில மாதங்களாக ராணுவ நடவடிக்கை குறைப்பு

## பிரதமர் ரணில் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 9

கடந்த சில மாதங்களாக இராணுவ நடவடிகைகள் குறைக்கப்பட்டுள்ளன. ஆனால் கிழக்கில் படையினர் தமது நிலைகளைப் பலப்படுத்தி உள்ளனர். வடக்கில் படையினர் புலிகள் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றனர்.

சமீபத்தில் புத்தளத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு-கிழக்கில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்று அவசியமானது ஆகும். அதுவரை போராளிகளின் ஆயுதங்களைக் களையும் நடவடிக்கை தொடரும்.

அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலில் வடமாகாணத் தமிழ் மக்கள் உட்பட நாட்டு மக்கள் அனைவரும் வாக்களிக்கும் விதத்தில் தீர்வுத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுவிடும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். (இ-1)

## காணி இடாப்புகள் திருத்தம்

விவசாய காணிஇடாப்புகளில் திருத்தங்களை செய்வதற்கான நடவடிக்கைகளை கமநல சேவை நிலையங்கள் தற்போது எடுத்து வருகின்றன. இடாப்புகளில் திருத்தங்கள் செய்வதற்கான விண்ணப்பங்களை கமநல சேவை நிலையங்கள் அறிவித்துள்ள திகதிகளுக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த-62)

## மாணவருக்கு பணப் பரிசு

உடுவில், ஜூன் 9

ஆரிய திராவிட பாஷா அபிவிருத்தி சங்கத்தினால் நடத்தப்பட உள்ள ஜி.சீ.ஈ (உயர்தரம்) முன்னோடித் தேர்வில், தமிழ் பாடத்தில் மாவட்டத்தில் மிகக் கூடிய புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்குப் பணப் பரிசுகளை வழங்க தமிழ் வளர்ச்சிக் கழகம் முன்வந்துள்ளது.

முதல் பரிசாக 3 ஆயிரம் ரூபாவும், இரண்டாவது பரிசாக 2 ஆயிரம் ரூபாவும், மூன்றாவது பரிசாக ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும். கோட்ட மட்டத்தில் மிக கூடிய புள்ளிகளை பெற்ற மாணவனுக்கு ஆயிரம் ரூபா பரிசாக வழங்கப்படும். (த 152)

## அகதி முகாம்களில் மலசலகூடங்கள்

உடுவில் ஜூன் 9

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மூன்று முகாம்களில் மொத்தம் 15 மலசலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் இவற்றை அமைத்துக் கொடுத்துள்ளது.

சச்சி முகாம், முகுந்தன் முகாம், விநாயகர் முகாம் ஆகியவற்றில் தங்கியுள்ள மக்களின் நன்மை கருதி இந்த நிரந்தர மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. [த-152]

## மூன்று நூற்றாண்டு...

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இவ்வாலயத்தில் முருகனுக்குரிய சகல நைமித்திக உற்சவங்களும் நடத்தப்படுவதுடன் முருகனின் சிறப்புத் திருவிழாவான திருக்கார்த்திகை உற்சவங்களும், புரட்டாதி மாத பூர்வபக்க முதல் சுக்கிர வாரம் தொட்டுப் புராண படனம் ஆரம்பமாகி கந்தஷஷ்டி, திருக்கார்த்திகை, சூரன் போர் பூர்த்தியாகி வள்ளி திருமணத்துடன் நிறைவாகும். இதில் வெளியிடங்களிலிருந்தும் அனேக பக்தர்கள் வந்து கலந்து கொண்டு விரதம் அனுஷ்டிப்பது— புராதனமான காலம் தொடக்கம் நடைபெறும் வழக்கமாகும் அத்துடன் பெரியபுராணம் பங்குனி உத்தரத்தில் ஆரம்பிக்கப்பட்டு நால்வர் குரு பூசையும் கந்தபுராணச் சிறப்பு நிமித்தமாகக் கச்சியப்ப சுவாமிகளின் குருபூசையும் மிகவும் விமரிசையாக நடத்தப்பட்டு வருகின்றது.

### திருப்புகழ் முற்றோதல் நிகழ்ந்த தலம்

எமது பிரதேசத்திலே முதல் முதலாகத் திருப்புகழ் முற்றோதலை ஆரம்பித்து வைத்தும், எமெக்கெல்லாம் திருப்புகழ் சந்தக் கவியைப் பாடி முருகனைத் துதிக்க அருள் புரிந்த அருணகிரிநாதருக்கும் குருபூசை செய்து விழா நடத்திய பெருமை இவ்வாலயத்திற்கே உரியதாகும். திருப்புகழ் முற்றோதல் ஒவ்வொரு ஆனிமாத உத்தர நட்சத்திரத்திலும் ஆரம்பித்து புரட்டாதி மாதத்தில் நிகழும் அருணகிரிநாதர் குரு பூசையுடன் நிறைவாகும்.

''அவனருளாலே அவன் தாள் வணங்கி''...... என்றபடி எல்லாம் வல்ல வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியப் பெருமான்டி பற்றி நின்று பரவி நிற்கும் தொண்டர்களும், இவ்வரிய தொண்டினை நிறைவேற்ற அளப்பரிய உதவிகளை நல்கிய பக்த கோடிகளுக்கும் சகல நற்பேறுகளையும் கொடுப்பராக என முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

## புராண படனத்துக்கு....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டேன் என்று அடம் பிடித்து அறிவித்தார். அவரது கண் முன்னாலேயே அவரது மகன் அறிவு நினைவு இல்லாமல் மயக்கமடைந்து வீழ்ந்து விட்டார். சிறுவனை கோவில் முன்னால் கிடத்தி திருநீறிட்டு தீர்த்தம் தெளித்து அப்பனே பிள்ளையாரே ''என்னை மன்னித்துக் கொள்'', உன்திருவிழாவை நானே செய்ய வரம் கொடு'' என்று அவர் அழுது வேண்டினார். சில நிமிடங்களில் மகனும் மயக்க தெளிந்து எழுந்தார்.

ஆலயத்தின் ஆரம்ப காலத்தில் பூசகராகவிருந்த குருக்கள் ஒருவர் அக்கால வழக்கப்படி கிராமத்து வயல்களுக்கு வேறு உதவியாட்களையும் அழைத்துக் கொண்டு அறுவடை காலங்களில் ''மீசுவரி'' நெல் வாங்கப்போவது வழக்கம். மாலையில் புறப்பட்டால் திரும்பி வர பதினொரு பன்னிரண்டு மணியாவதுமுண்டு. குருக்கள் திரும்பி வரும்போது கோயிலில் வெள்ளிப் பிரம்புடன் ஒருவர் நடந்து திரிவாராம். இவர்களைக் கண்டதும் ''வாருங்கள், உங்களின் வரவுக்காகத்தான் காத்திருந்தேன்'' என்று சொல்லிவிட்டு உள்ளே போய்விடுவாராம். எம் அப்பன் ஆனந்த விநாயகனின் ஆனந்த நடனத்தை, அற்புதங்களை முதியவர்கள் கூறும்போது உள்ளம் உருகும்.

கோவிலின் வடக்கு வீதியை அடுத்து இன்று அழிபாடுகளுடன் காணப்படும் ஒரு மடமும், சுற்று மதிலும், கேணியும், ஓர் கிணறும் காணப்படுகின்றன. இம்மடத்தில் ஓர் திண்ணைப் பள்ளிக்கூடமும் இவ்வளவிலிருந்தது விநாயகப் பெருமானுக்கு தேவையான மலர்களைப் பெறக்கூடிய ஓர் பெரிய நந்தவனமும் இருந்ததாக அறிய முடிகின்றது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் ஆலய தர்மகர்த்தாவாக விருந்த திரு. ஆறுமுகம் கைலாயபிள்ளையின் நல்லெண்ணத்தினாலும், கிராமப் பெரியோர்களினதும் இளைஞர்களது முயற்சியினாலும் பரிபாலனசபை அமைக்கப்பட்டு, இவர்கள் அனைவரது கூட்டுமொத்த முயற்சியினால் இன்று செல்லப்பிள்ளையார் ஆலயம் மூலமூர்த்தி விநாயகப் பெருமானுக்கு புனருத்தாரண வேலைகளும் பரிவார மூர்த்திகளான சுப்பிரமணியர் சமேத வள்ளி தெய்வானை, மகாலட்சுமி, வைரவர், சண்டேஸ்வரர், தம்பப்பிள்ளையார் ஆகியோருக்கு விக்கிரகங்கள் அமைக்கப்பட்டு தனித்தனி கோவில்கள் அமைத்துப் புதுப்பொலிவு பெற்று தெய்வமணம் கமழ்கின்றது.

தொண்டர் தம் பெருமை சொல்லுதற்கெளிதோ? அற்புதங்கள் பல புரியும் எம் அப்பன் செல்லப்பிள்ளையாரின் கும்பாபிஷேக, மண்டலாபிஷேக நிகழ்வுகளில் கலந்து அப்பன் திருவருளால் எல்லாச் செல்வங்களும் பெற்றுச் சிறப்புற வாழ்வாங்கு வாழ்வார்களாக. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஊனாலியில் தோல்வி!

ஊளாலிக் கடலேரியால் பயணம் செய்யும் பொது மக்களைத் தம்மால் கைது செய்ய முடியாதுள்ளது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன தெரிவித்திருக்கிறார்!

வாரந்துச் செய்தியாளர் மாநாட்டில் அரசாங்கத் தரப்பின் தோல்வியைத் தன்னை அறியாமலே ஒப்புக் கொண்டு விட்டார்! பாவம்!

ஊளாலிக் கடலேரிப் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்ட பிரதேசம். அரசு அதனை தடைசெய்யப்பட்ட பிரதேசமாகப் பிரகடனம் செய்துவிட்டது. அதனால் அவ்வழியே பயணம் செய்பவர்கள் சட்டத்தை மீறுகிறார்கள். அவ்வழியே போக்குவரத்துச் செய்யும் பொதுமக்கள் தாம் சுடப்படுவார்கள், தவறான பாதையால் செல்கிறார்கள் என்பதை உணர வேண்டும் — என்றும் பிரிகேடியர் கூறியிருக்கிறார்.

ஊளாலித் தடை விதியை தம்மால் ஐம்பது சதவீதம் மட்டுமே நடைமுறைப்படுத்த முடிகிறது என்றும், நூற்றுக்கு நூறு வீதம் இயலவில்லை என்றும் அவர் பாதுகாப்புப் படையின் தோல்வியை மேலும் ஒப்புக் கொண்டிருக்கிறார். அதேவேளை பொதுமக்களைக் கடற்படையினர் சுடுவதில்லை என்று ஒரு பொய்யுரையையும் அவிழ்த்துவிட்டிருக்கிறார்!

மொத்தத்தில், ஊளாலியை அரசாங்கம் தடைசெய்யப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்தி இருப்பினும், அதில் வெற்றி காண முடியவில்லை. உரிய விதத்தில் போக்குவரத்தைக் தடுக்க முடியவில்லை. அரசின் தடையை குடாநாட்டுப் பொது மக்கள் பகிரங்கமாக மீறுகிறார்கள். அவர்களைக் கைது செய்யும் வல்லமை தானும் அரச படையினருக்கு இல்லை. தங்கள் இயலாத் தன்மையால் ஏற்பட்ட கோபத்தில், பொது மக்களைப் பழிவாங்க வேண்டும் என்ற ஒவ்வாத நோக்குடன், கொடிய இலக்குடன் செயற்படுகிறார்கள் — பயணிகள் படகுகள் மீது அடிக்கடி சுடுகிறார்கள்

வடக்கிலும், கிழக்கின் பல பகுதிகளிலும் அரசாங்கத்தின் ஆணை செல்லுபடியாகவில்லை; முற்றாக ஒழிந்தாயிற்று. தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு இந்தத் தோல்வி நிலை நீடிக்கும் சந்தர்ப்பத்தில், கனவான் தனமுள்ள அரசாங்கமெனின் தனது தோல்வியை ஒப்புக் கொண்டு தமிழ்ப் பகுதியில் தனது செயற்பாட்டை வாபஸ் பெற்று, படைகளையும் வாபஸ் பெற்று இங்கிருந்து வெளியேறி இருக்க வேண்டும்! ஆனால் அரசாங்கமோ போரைத் தொடர்ந்து நடத்தி தனது தோல்வியை மறைத்து ஆணையை மீண்டும் செல்லுபடியாக்க முயல்கிறது.

ஊளாலித் தடை விடயத்தில் கூட அரசுக்கும் படைகளுக்கும் தோல்வியே தாம் இட்ட உத்தரவைச் செயற்படுத்த முடியாமல், தடையை மீறுவோரைச் சட்டப்படி கைது செய்ய முடியாமல் திண்டாடுகிறார்கள்!!

தாம் இட்ட உத்தரவை முழுதாக நடைமுறைப்படுத்த முடியவில்லை என்று கண்டால் அதனை, ரத்துச்செய்வதே நாகரிகம். அந்த விதியை நடைமுறைப்படுத்துவதாகக் கூறித் தங்களைத் தாங்களே ஏமாற்றுகிறார்கள். இந்தப் போலித்தனத்தை விட தடையை நீக்கி குடா நாட்டு மக்கள் அச்சமின்றிப் போக்குவரத்துச் செய்ய அனுமதிக்கலாமே?

தோல்வியை மூடி மறைப்பதால் என்ன பயன்? அதன் பொருட்டு மக்களைச் சுட்டுக் கொன்று கொடுமை புரிவது ஏன்? பிரிகேடியர் அங்கமன தோல்வியை பகிரங்கப்படுத்திய பின்னரும் அரசாங்கம் தனக்குப் பயன்தராத தடை விதியை சிக்கெனப்பிடித்து எதனைச் சாதிக்கப் போகிறது? தமிழர்களை அதிக எண்ணிக்கையில் கொல்வதனையா?

---

யாழ்ப்பாணத்தில் காவலின் இருக்கும்

# பொலிஸாரின் உண்ணாவிரதத்தால் புலிகள்-அரசு பேச்சுக்கு வழி ஏற்படும்

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் காவலில் இருக்கும் 39 பொலிஸாரும் ஆரம்பிக்கவிருக்கும் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் ஒரு திருப்பு முனையாக அமையப் போகின்றது என கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று கருத்து வெளியிட்டிருக்கிறது.

எதிர்வரும் 13 ஆம் திகதி முதல் தாங்கள் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக மேற்படி காவலில் உள்ள பொலிஸார் அறிவித்திருக்கின்றனர்.

இந்த அறிவிப்பு அரசுக்கு புதியதொரு தலையிடியைத் தோற்றுவிக்கப் போகிறது.

இவர்களின் விடுதலைக்காக புலிகளுடன் பேச வேண்டிய நிர்ப்பந்தம் புதிய ஜனாதிபதி விஜேதுங்காவின் அரசுக்கு ஏற்படும்.

அப்படி பேச்சுவார்த்தை நடத்தும் பட்சத்தில் அதுவே இனப்பிரச்சினை தொடர்பாக அரச—புலிகள் பேச்சுக்கு அடிக்கல்லாக இருக்கப் போகிறது என்பது திண்ணம்.

—இப்படி இந்த வார இதழ் கருத்து வெளியிட்டுள்ளது.

# கடந்த ஆண்டில் ஜேர்மனிக்குச் சென்ற 5,300 இலங்கையர் நாடு கடத்தப்படுவர்

கொழும்பு ஜூன் 9

கடந்த ஆண்டு ஜேர்மனிக்குச் சென்று தஞ்சம் கோரிய 5 ஆயிரத்து 300 இலங்கையரும் நாடு கடத்தப்படும் ஆபத்தை எதிர்நோக்கி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் ஜேர்மன் நாடாளுமன்றம் நிறைவேற்றிய தஞ்சம் கோரும் சட்டத் திருத்தத்தைத் தொடர்ந்து இந்த இலங்கை அகதிகள் நாடு கடத்தப்பட முடியும் என்று கொழும்பில் ஜேர்மன் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜேர்மன் அரசமைப்பின் 16 (ஏ) ஷரத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ள இத்திருத்தத்தின்படி —

உண்மையில் அரசியல் துன்புறுத்தலுக்குள்ளாகும் அகதிகளுக்கே தஞ்சம் வழங்குவது குறித்து பரிசீலனை செய்யப்படும் என்றும்—

அப்படியானவர்களுக்கு பூரண பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் துன்புறுத்தலைத் தவிர்ந்த வேறு காரணங்களுக்காக ஜேர்மனிக்கு வரும் அகதிகளை புதிய சட்டத்திருத்தம் கட்டுப்படுத்தும் என்று கொழும்பு ராஜதந்திரி தெரிவித்தார்.

ஜேர்மனிக்கு வந்துள்ள இலங்கை அகதிகளில் 98 சதவிகிதமானோர் பொருளாதார குடியேற்றக்காரர்கள் என்றும்—

புதிய சட்டத் திருத்தத்தின்படி அவர்கள் அகதி அந்தஸ்து கோரும் தகுதியைப் பெறவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை—

ஜேர்மனியைப் பின்பற்றி பிரான்ஸும் அகதிகள் சட்டத்தை கடுமையாக்க இருப்பதாக மேற்கு நாட்டு ராஜதந்திரி ஒருவர் கூறினார்.

இதனிடையில் —

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் இருந்து ஒருமுகப்படுத்த குடியேற்ற கொள்கை ஒன்றை 12 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய சமூகம் வகுக்க விருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## பிரேமாவின் அதிகாரிகள் பலர் பலே ஆசாமிகளாம்!

ஜனாதிபதி பிரேமதாஸா பதவியில் இருந்த போது, ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றிய உயர் அதிகாரிகள் பலர் பிரேமாவின் வாசஸ்தலமான ''சுசரித்த பவனை'' பயன்படுத்தி தமது தனிப்பட்ட தேவைகள் பலவற்றை பூர்த்தி செய்திருக்கிறார்களாம். பலே ஆசாமிகளாம் அவர்கள்!

இது பற்றிய பல தகவல்கள் இரகசியப் பொலிஸாருக்குக் கிடைத்திருப்பதாகவும்—

அவை பற்றிய விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் — தெரிவிக்கப்படுகின்றது. (உ-8)

## ஆலயங்களில்

தலையாழி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் கோவில் வருடாந்த சங்காபிஷேகம் இன்று புதன்கிழமை பகல் நடைபெறும். தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும். (த-30)

o o o

சாவகச்சேரி சங்கத்தானை சந்தசுவாமி கோவில் மகோற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். 18 ஆம திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (க)

o o o

சாவகச்சேரி அமிர்தபாஷணி அம்பிகா சமேத வாரிவன நாதசுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 10.45 மணிக்கு நடைபெறும். (க-30)

o o o

இணுவில் கந்தசுவாமி கோவில் மகோற்சவ தெய்வீக இசையரங்கில் இன்று இரவு 7 30 மணிக்கு வயலின் வித்துவான் ஆர். இராதாகிருஷ்ணனின் வயலின் சோலோ கச்சேரி இடம் பெறும். (உ-3)

o o o

வண்ணார்பண்ணை காட்டுத்துறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோவில் மகோற்சவம் நாளை வியாழக்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

ஜூன் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமைமாலை8.30மணிக்கு தேர் உற்சவமும் மறுநாள் சனிக்கிழமை காலை பத்து மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெறும். (க-152

o o o

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. ஜூலை மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை ரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க)

o o o

சண்டிலிப்பாய் வேவிற்பதி ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் தேவஸ்தான மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை காலை பத்து மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. இம்மாதம் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை இரதோற்சவமும் மறுநாள் காலை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் 17 ஆம் திகதி வியாழக்கிழமை [illegible] மூன்று மணிக்கு நடைபெறும். [illegible]

## பேராயர் ஜெபநேசனுக்கு சனியன்று வரவேற்பு விழா

தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் புதிய பேராயராக அபிஷேகம் செய்யப்பட்ட கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆண்டகை அவர்களுக்கு எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு வட்டுக்கோட்டை தென் இந்திய திருச்சபையின் ஆசன ஆலயத்தில் வரவேற்பு விழா நடைபெற உள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் அதிபரான பேராயர் ஜெபநேசன் கடந்த 30 ஆம் திகதி சென்னையில் தென்இந்திய திருச்சபை, யாழ் அத்தியட்சாதீனத்தின் மூன்றாவது பேராயராக அபிஷேகம் செய்யப்பட்டது தெரிந்ததே.

சனிக்கிழமை நடைபெற உள்ள வரவேற்புவிழா வைபவத்தில் முன்னாள் பேராயர் அதிவண டி.ஜே அம்பலவாணர் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொள்ள உள்ளனர். (இ-161)

ஒரு வருடம் சேவையாற்றிய

## பதில் அதிபர்களுக்கு நிரந்தர நியமனம்!

யாழ்ப்பாணம், ஜூன் 9

அரசாங்கப் பாடசாலைகளில் 1993 ஜூன் முதலாம் திகதிக்கு முன்னர் குறைந்தது ஒரு வருடகாலம் தொடர்ச்சியாகப் பதில் அதிபர்களாகக் கடமையாற்றியவர்களை நிரந்தர அதிபர்களாக நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்திருக்கிறது.

இது தொடர்பான விவரங்கள் மாகாண பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்டோர் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும் என கல்விச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் திரு. கே. ஜெயக்குமார் தெரிவித்தார்.

பதில் அதிபர்கள் மற்றும் அதிபர்களின் கடமைகளைப் பொறுப்பேற்று பணிபுரிவோர் இந்த நிரந்தர நியமனங்களைப் பெற தகுதியுடையவர்கள் என்றும் அவர் தெரிவித்தார். (உ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

''உதயன்'' கிண்ணத்திற்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் பருத்தித்துறை திக்கமுனை விளையாட்டு மைதானத்தில் நடத்தி வரும் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் கால் இறுதியாட்டம் ஒன்று இன்று மாலை இடம்பெறவிருக்கிறது

இந்த ஆட்டத்தில் புத்தூர் வீனஸ் அணியை எதிர்த்து புங்குடுதீவு அம்பாள் வி. க. ''பி'' அணி மோதும்.

o o o

யாழ். பல்கலைக் கழகம் 'உதயன்' ஆதரவுடன் பல்கலைக் கழக ஆடுகளத்தில் நடத்தி வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3.45 மணி:- சென்ற லைட்ஸ் (சொக்ஸ்) எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி.

★ 4.45 மணி:- [illegible] கழக கூட்டு அணி எதிர் ஒல்ட் கோல்ட்ஸ்.

o o o

சுன்னாகம் வளர்பிறை விளையாட்டுக் கழகம் சுன்னாகம் சிங்க மாப்பானர் விளையாட்டு மைதானத்தில் —9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் — நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3.30 மணி:- ஊரெழு ரோயல் எதிர் ஆனைக்கோட்டை அறிவொளி.

4.30 மணி:- திருமலை நட்சத்திரங்கள் எதிர் புத்தூர் வீனஸ்.

o o o

கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் ''கே.வி.வி.வி.'' கிண்ணத்துக்காக நடத்தி வரும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் போட்டித் தொடரின் கால் இறுதியாட்டம் இன்று பிற்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகளில்

சுன்னாகம் கொத்தணிப் பாடசாலைகளின் 7 முதல் 13 வயது மாணவர்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் நாளை வியாழக்கிழமை கொத்தணி அதிபர் திரு. ப. விக்கினேஸ்வரன் தலைமையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (க-152)

## வெள்ளச் சேதம் ரூ. 35 கோடி!

கொழும்பு, ஜூன் 9

காலி, மாத்தளை, களுத்துறை, இரத்தினபுரி, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்டிருக்கும் வெள்ளத்தினால் பயிர்ச்செய்கைக்கு ஏற்பட்ட சேதங்கள் உட்பட மொத்தச் சேதம் 35 கோடி ரூபாவுக்கு மேல் இருக்கும் என சமூக சேவைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (உ-8)

---

பிரேமா--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

போதும் பிரேமா கொலை குறித்து உள்நாட்டு வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் பல கேள்விகளை எழுப்பினர். இந்தக் கொலைக்கு புலிகளா அல்லது வெளிநாட்டு இயக்கங்களா காரணம் என அவர்கள் துருவித் துருவிக் கேட்டனர்.

ஆனால் இது பற்றி விசாரணை நடக்கிறது என்று மட்டுமே, இரகசியப் பொலிஸ் பிரிவின் பிரதிப் பொலீஸ் மா அதிபர் அமரசேன ராஜபக்ஸ பதிலளித்தார்.

இதிலிருந்து கொலையை யார் செய்தார்கள் என்பதை இன்னமும் திட்டவட்டமாகக் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறது என்றே கூறத் தோன்றுவதாக சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் பலர் கருத்துத் தெரிவித்தனர்.

---

வடபகுதி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

அந்த முகாமுக்கு கூட்டி வரப்படும் பயணிகள், பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர்களின் பொதிகள் வீதியோரங்களில் வைக்கப்பட்ட பின்னர், முகாமுக்குள் அழைத்துச் செல்லப்பட்டு நீண்ட நேரம் விசாரிக்கப்படுகின்றனர்.

விசாரணை மற்றும் சோதனைகளால் ஏற்படும் தாமதத்தால் பயணிகள் பலர் நண்பகல் யாழ்தேவி ரயிலைத் தவறவிடுவதாகவும் —

அவர்கள் மாலை வரை வவுனியாவில் காத்து நின்ற பின், இரவு ரயிலிலேயே கொழும்பு செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலைத் தாக்குதலுக்கு அஞ்சியே டி. பியின் மிகுந்தலை விஜயம் ரத்து

கொழும்பு, ஜூன் 9

மிகுந்தலைப் பகுதியில் தற்கொலைத் தாக்குதல் நபர் ஒருவர் நடமாடும் சாத்தியம் உள்ளதாக எச்சரிக்கை செய்யப்பட்டதைத் தொடர்ந்தே கடந்த வெள்ளிக்கிழமை அங்கு நடந்த 2 ஆயிரத்து 300 ஆவது மிகுந்து ஜயந்தி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் தமது திட்டத்தை ஜனாதிபதி விஜேதுங்கா ரத்துச் செய்தார் என்று அறிவிக்கப்படுகிறது

முன் பாதுகாப்பு நடவடிக்கையாக ஜனாதிபதியின் மிகுந்தலை விஜயம் ரத்துச் செய்யப்பட்டதாக பாதுகாப்பு அதிகாரிகள் கூறினார்கள்.

''சண்டே ரைம்ஸ்'' இத்தகவலை வெளியிட்டது.


## வாழ்த்துகின்றோம்

★ இன்று மணவாழ்வில் புகும் ✶

**மணமகன்**

மயில்வாகனம் - மகாதேவா B. Sc (B. Ad)
(உபஅதிபர் - புனித பற்றிமா வித்தியாலயம் கிளிநொச்சி)

**மணமகள்**

கணபதிப்பிள்ளை - உமாதேவி
(முன்னைநாள் உதவித் திட்டமிடல் அதிகாரி சிறுவர் பாதுகாப்பு நிதியம் - யாழ்ப்பாணம்)

தம்பதியினரை பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றோம்.

(6246) — நண்பர்கள் —


## தொழில்நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சை - 1992

பின்வரும் பயிற்சிநெறிகளுக்குரிய மேற்படி இறுதிப் பரீட்சைகள் எதிரே குறிப்பிடப்பட்ட திகதிகளில் ஆரம்பமாகும் என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

| பயிற்சி நெறிகள் | பரீட்சை ஆரம்பிக்கும் திகதிகள் |
|---|---|
| 1. D 113 — H.N.D.A 2ஆம் வருடம் | — 14-06-1993 |
| 2. D 101, D 114—H.N.D.C / H.N.D.A 3ஆம் வருடம் | — 21-06-1993 |
| 3. D 104, D 118—H.N.D.C / H.N.D.A 4ஆம் வருடம் | — 28-06-1993 |
| 4. N.C.T. (C.E/M.E/E.E/G.S) | — 28-06-1993 |
| 5. C. 90 — N.C.A.T. | — 01-07-1993 |

மேற்படி பரீட்சைக்குரிய அனுமதிப் பத்திரங்களை தங்களுடைய மாணவர் பிரவேச அனுமதியட்டையை பகுதித் தலைவரிடம் சமர்ப்பித்து பரீட்சை ஆரம்பிக்கும் திகதிக்கு முதல் வரும் அலுவலக நாளில் பெற்றுக் கொள்ளவும்.

08-06-1993

அதிபர்
தொழில்நுட்பக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

(சி/5231)

## மரண அறிவித்தல்கள்

### வைத்திய கலாநிதி
### கதிரவேல் கெங்காதரம்பிள்ளை

சித்தன்கேணியைச் சேர்ந்த வைத்திய கலாநிதி கதிரவேல் கெங்காதரம்பிள்ளை சிவபதம் அடைந்து விட்டார். 5-6-93 இல் அறிவித்த விவரத்தின்படி அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (10-6-93) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாற்று மயானத்திற்கு பிற்பகல் 3 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
கெ. தபோதனி
(மனைவி)

வட்டுக் கிழக்கு,
சித்தன்கேணி. (26036)

### திருமதி றீற்றா புஸ்பராணி
### (ராசாத்தி)

திருமதி றீற்றா புஸ்பராணி காலமாகிவிட்டார் அன்னார் அல்லைப்பிட்டியை பிறப்பிடமாகவும், சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சுவக்கீன் பிள்ளை யேசுதாசனின் (துரை) அன்பு மனைவியும், நிர்மலா, நிர்மலன், டெனி ஆகியோரின் அருமைத் தாயாரும், பா. பிலிப்பையா - விக்ரோறியா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், சகாயதாசன் (கனடா), லூட்ஸ்மேரி (செல்வம்), எம். எம். லூயிஸ் (கனடா), டெய்சி, ஜெசிந்தா (கனடா) ஆகியோரின் சகோதரியும், சேவியர், வில்பிறட் றூபநாயகம் ஆகியோரின் மைத்துனியும், ஜெயறூபன், கார்மேலா, கமலிற்றா, மெற்றில்டா ஆகியோரின் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 1993-06-9 இன்று பிற்பகல் 3.00 மணிக்கு 15/1 புதுவீதி, கொய்யாத்தோட்ட இல்லத்தில் ஆரம்பமாகி கிறிஸ்துஇராசா கோவிலில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு சில்லாலை கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்;
சுவக்கீன்பிள்ளை யேசுதாசன்
(பூந்தான்)

(26041)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 09 - 06 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## இன்று

யாழ். பிரதான வீதி திருமறைக் கலாமன்ற கேட்போர் கூடத்தில் இன்று புதன் மாலை 4.30 மணிக்கு சைவ சித்தாந்த ஆய்வு வட்டக் கருத்தரங்கு நடைபெறும். ஆசிரியர் ஆ சபாரத்தினம் சிவஞான போதம் பற்றி உரை நிகழ்துவார். [த-51]

o o o

சாவகச்சேரி நகரப் பகுதியிலுள்ள சந்திகளில் வீதி விளக்குகள் வைக்கும் திட்டம் இன்று மாலை சாவகச்சேரி நகரசபை செயலாளர் த. நவரத்தினராசாவினால் ஆரம்பித்து வைக்கப்படும். [உ-117]

o o o

அளவெட்டி தெற்கு முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையத்தின் மாதர் சங்க அங்குரார்ப்பண நிகழ்வு இன்று பிற்பகல் 3 00 மணியளவில் அளவெட்டி தெற்கு அருணாசலம் வித்தியசாலையில் வலி வடக்கு உதவி அரச அதிபர் தலைமையில் நடைபெறும். [உ-13]

o o o

யாழ். பல்கலைக்கழக பொருளாதாரத் துறையின் சமூக விஞ்ஞான மன்றத்தினால் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கருத்தரங்க ஒன்று நடத்தப்பட விருக்கிறது. இந்நிகழ்வில் தேசிய சேமிப்பு வங்கியின் யாழ் கிளை முகாமையாளர் திரு. என். சிவபாலகணேசன் ''வங்கிகளின் வைப்புத் திட்டங்களும் அதன் நடைமுறைகளும்'' என்ற பொருளில் கருத்துரை வழங்குவார்.

o o o

சாவகச்சேரி திருச்சபை தொழில் பயிற்சி நிலையத்தினரால் நடத்தப்பட்ட ஆங்கிலம் தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து பாடங்களுக்கான பரீட்சைகள் இன்றும் நாளையும் திருச்சபை குருமனையில் நடைபெறும். [த-117]

## நாளை

யாழ் பல்கலைக்கழக ஆங்கில மன்றத்தின் ஏற்பாட்டில் இரண்டு ஆங்கில நாடகங்கள் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மேடையேற்றப்படவுள்ளன.

ஆபிரிக்க மற்றும் ஈழத்து எழுத்தாளர்களினால் எழுதப்பட்ட அந்த இரு நாடகங்களிலும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களும், யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவர்களும் இணைந்து நடித்துள்ளனர்.

நாடகங்களைத் தொடர்ந்து ஆங்கில நாடகங்களை ''சுதேச மயப்படுத்தல்'' என்னும் தலைப்பில் கலந்துரையாடல் ஒன்று அங்கு நடைபெறவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி, திரு. வி. எல். ரவீந்திரன், கவிஞர் சோ. பத்மநாதன், திரு கே. கே. சோமசுந்தரம், கலாநிதி சுரேஸ் கனகராஜா ஆகியோர் அதில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர். (உ-5)

o o o

யாழ் கோட்டப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவினருக்கான மெய்வல்லுநர் போட்டி பற்றிய பயிற்சிக் கருத்தரங்கு நாளை வியாழன் காலை 9.30 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும். ஒவ்வொரு பாடசாலைகளில் இருந்தும் ஓர் ஆசிரியரை இக் கருத்தரங்கிற்கு அனுப்பி வைக்குமாறு யாழ். கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் அதிபர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார். (த)

## தமிழ்த்தின போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ். கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ்த் தினப் போட்டி எதிர்வரும் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறும். கொத்தணி, தேசிய, தனியார் பாடசாலைகளில் இடம்பெற்ற தமிழ்த்தினப் போட்டிக்கு முதலிடம் பெற்ற போட்டியாளர்கள் இதில் கலந்து கொள்வர். (த)

## கண் டாக்டர் பணியில்

யாழ்ப்பாணம் ஜூன் 9

கண் வைத்திய நிபுணர் திருமதி ஐ. கண்ணுத்துரை மீண்டும் யாழ். ஆஸ்பத்திரியில் கடமையாற்றவிருக்கிறார்.

யாழ். வைத்தியசாலையில் கண் வைத்திய நிபுணராகக் கடமையாற்றிய டாக்டர் குகதாசன் மேற்படிப்புக்காக வெளிநாடு சென்றுள்ளதால்—

ஆறு மாத காலம் யாழ். ஆஸ்பத்திரியில் மீள் நியமனம் பெற்று திருமதி ஐ. கண்ணுத்துரை நேற்று இங்கு வந்து சேர்ந்தார். (உ-3)

## ஜனாதிபதியின்.,.

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதைத் தொடர்ந்து கொழும்பில் உள்ள பௌத்த பிக்குகளுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டது. யாழ்ப்பாணம் வந்து திரும்பிய பௌத்த பிக்களும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அதையடுத்து அங்கிலிக்கன் ஆயர் மேதகு கென்னத் பெர்னாண்டோவையும் குழுவினர் சந்தித்து, அவர் மேற்கொண்டுள்ள முயற்சியின் முன்னேற்றம் குறித்து கேட்டறிந்தனர்.

சர்வமதத் தலைவர்களையும் தூதுக்குழுவினர் சந்தித்ததோடு அரச நிர்வாகம் பாதுகாப்புத் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளையும் அவர்கள் சந்தித்தனர். (அ 3)

## சமாதானத்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குமாறு எம்மிடம் கோரினார்கள்.

ஒரு நாட்டின் அரசாங்கம் அந்த நாட்டு மக்களே. அரசியல் கட்சிகளோ அல்லது போராளிகள் குழுக்களோ அல்ல. மக்கள் ஒன்று சேர்ந்து ஒரே சக்தியாக செயற்பட்டால் நிரந்தரத் தீர்வைக் காண முடியும்.

1956 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்நாட்டில் மக்கள் எப்படி வாழ்ந்தார்களோ அப்படியான நிலை வந்தால் தான் சமாதானம் நிலைபெறும். — என்று அவர் குறிப்பிட்டார்.

சமாதானத் தூதுக்குழுவின் தலைவரும், தாய்லாந்தைச் சேர்ந்த பௌத்த குருவுமான வண. சோமகே குவாகிற்றோ தேரர் அங்கு கூறியதாவது:-

இங்குள்ள மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களையும், இங்கு நடந்தவற்றையும் பார்க்கும் போது பெரும் கவலை ஏற்படுகிறது. உண்மையான சமாதானம் இங்கு ஏற்பட்டால் தான் மக்கள் கஷ்டங்களில் இருந்து விடுபட முடியும்.

சமாதானம் வெறும் பேச்சளவில் இருக்கக்கூடாது. செயலளவில், நடைமுறையில் உண்மையான சமாதானம் வர வேண்டும். அதற்கு சகல இன மக்களும் இணைந்து செயற்படவேண்டும். — என்றார்.

### அறிகுறி இல்லை

தூதுக்குழுவில் அங்கம் வகிக்கும் மலேசியாவைச் சேர்ந்த ஆயர் மேதகு அன்ரனி செல்வநாயகம் கூறியதாவது:-

அரசியல் தீர்வு ஒன்று விரைவில் வரும் என்பதற்குரிய அறிகுறி காணப்படவில்லை இராணுவத் தாக்குதல் அறிகுறியும் இல்லை.

நாம் சந்தித்த எல்லோரும் சமாதானம் வேண்டுமென்கிறார்கள். ஆனால் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணமுடியாது. சகல தரப்பினரும் இணைந்து செயற்பட்டே, ஆராய்ந்தே, பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் — என்று தெரிவித்தார்.

பிலிப்பீன்ஸைச் சேர்ந்த மத குரு வண. இரசியோ கோரிட்ஸ்கியோ தமது கருத்தைப் பின்வருமாறு வெளியிட்டார்:-

சமாதானத் திட்டம் தொடர்ந்து நிலைபெற வேண்டுமானால் முதலில் மக்களின் கருத்து அறியப்பட வேண்டும். அதன் அடிப்படையிலேயே நாம் மக்களின் கருத்தை அறிய முனைந்துள்ளோம்.

சமாதானத்துக்கான வழிமுறைகளைக் காணும் அறிக்கையைத் தயாரிக்கும் முன்னர் மக்களின் கருத்தை அறிய வேண்டும். அப்போது தான் காணப்படும் தீர்வின் பலனை அவர்கள் அனுபவிக்க முடியும். மக்கள் கருத்தை அறிந்த பின் அரசாங்கத்துடனும், போராளிகளுடனும் பேசவேண்டும் — என்றார். (அ-3)

## தாக்குதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 6

குடாநாட்டின் பல முகாமிலிருந்தும் நேற்றும் நேற்று முன்தினமும் குடியிருப்புப் பகுதிகளை நோக்கிப் படையினர் ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

நேற்று அதிகாலை 3 மணியளவில் கட்டுவன் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் ஏழாலைப் பகுதியை நோக்கிப் பலத்த துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் ஏழாலை வடக்கில் நித்திரையில் இருந்த சிவசம்பு வசந்தினி (வயது 22) என்ற இளம்பெண் காயமம் அடைந்தார் இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

## தூதுக்குழு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினர்.

இச் சந்திப்பின் போது இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பொருளாதாரத் தடை, மருந்துப் பொருள் தடையினால் மக்கள் எதிர்நோக்கும் இன்னல்கள் பற்றி அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளால் எடுத்துக் கூறப்பட்டது.

மாலை 5.30 மணியளவில் யாழ். நகரில் இராணுவத் தாக்குதல்களால் சேதமடைந்த இடங்களையும் அவர்கள் பார்வையிட்டனர். அத்துடன் கொழும்புத்துறை புனித சவேரியார் குருமடத்தில் குருத்துவ மாணவர்களையும் இத்தூதுக்குழுவினர் சந்தித்தனர்.

### இன்றைய சந்திப்புகள்

இன்று காலை இவர்கள் அரியாலை இடம்பெயர்ந்தோர் முகாம்களை சென்று பார்வையிடுவதுடன் யாழ். செயலக அதிகாரிகளையும் சந்திப்பர். பிற்பகலில் நல்லை ஆதீனத்தில் இந்து மதத் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவர்.

தூதுக்குழுவினர் இன்று மாலை 5 மணியளவில் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவர். இப் பேச்சுக்களின் போது வெளிநாட்டுத் தூதுக்குழுவுடன் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம், அருட்தந்தை எம். ஜி பயஸ், அருட்தந்தை எஸ். எச். ஜெபநேசன், அருட் தந்தை ஏ. ஜே. வி. சந்திரகாந்தன், திரு ஜீ. அருளானந்தன், திரு. ஜஸ்டின் பெர்ணாடோ ஆகியோரும் சேர்ந்து கொள்வர். (அ-ல-3)

## புட்டபர்த்தி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்ன என்பது தெரியவில்லை என ஆந்திரப் பிரதேச உள்துறை அமைச்சர் தெரிவித்தார்.

ஸ்ரீசாயி பாபாவின் சீடர்கள் பலரைப் பொலீஸார் விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளனர் என்று கூறப்படுவதை உறுதி செய்ய அதிகாரிகள் நேற்று மறுத்துவிட்டனர்.

இத்தாக்குதலுக்கான காரணம் என்ன என்று தெரியவில்லையாயினும்—

ஆச்சிரமத்தின் நிர்வாகத்துடன் ஏற்பட்ட சச்சரவே இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

சாயிபாபாவின் பக்தர்கள் இச்சம்பவத்தில் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகியிருக்கிறார்கள்.

பாபா மீது நடத்தப்பட்ட தாக்குதல் முயற்சியை மூத்த அரசியல் வாதிகள் கண்டித்துள்ளனர்.

ஆர், எஸ். எஸ். என்ற தீவிர இந்து அமைப்பே இத்தாக்குதலின் பின்னணியில் உள்ளது என்ற பத்திரிகைச் செய்திகளை பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் ஒருவர் வன்மையாக மறுத்தார்.

(மற்றொரு செய்தி 5 ஆம் பக்கத்தில்)

## விளையாட்டு நிக..

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகல் 1.30 மணிக்கு இடம்பெறும். கொக்குவில் இந்து மைதானத்தில் நடைபெறும் இந்த ஆட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய 'பி' அணி மோதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org